மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No.05/2020

2024–ம் ஆண்டு மார்ச் திங்கள் 18–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆரோக்கிய கெவிக்குமார் (PW3) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.18.03.2024</u>
<u>வா.சா.3</u>
<u>குறுக்கு விசாரணை :–</u>

தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் சேச ஜெபஸ்தியான் என்பவருக்கு பாத்தியம் ஆகும். சேசு ஜெபஸ்தியான் அப்பா பெயர் பிச்சை ஆகும். தாவா சொத்து ஆதியில் அலசு அந்தோணிக்கு பாத்தியப்பட்டது என்றால் அவருக்கு பாத்தியம் உள்ளது. அலசு அந்தோணிக்கு மூன்று மக்கள் சந்தியாகப்பன், ஜெபமாலை, அருளானந்தம் ஆவார்கள். அலசு அந்தோணிக்கு முன்பு தாவா சொத்து குப்பு பிச்சைக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை பிச்சை மாதவடியானுக்கு பாத்தியப்பட்டது ஆகும். குப்பு பிச்சையும், பிச்சை மாதவடியானும் ஒரே நபரா என்றால் இல்லை வேறு வேறு ஆட்கள். பிச்சை மாதவடியானின் வாரிசுகள் எத்தனை பேர் என்று தெரியுமா என்றால் தெரியாது. குப்பு பிச்சையின் மக்கள் மாணிக்க வாத்தியார், அருளப்பன், ஞானப்பிரகாசம், பிலவேந்திரன், ராயப்பன் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். குப்பு பிச்சை தாவா சொத்தை அலசு அந்தோணியிடம் ஒத்தி வைத்து மீட்க முடியாமல் கொடுத்துவிட்டார் என்றால் இல்லை பிச்சை மாதவடியானிடம் அலசு அந்தோணி கிரையம் வாங்கி விட்டார். கிரைய ஆவணத்தில் ஒத்தி வைத்து ஒத்தியை மீட்க முடியாமல் கிரையம் கொடுக்கப்பட்டது என்று உள்ளது என்றால் இல்லை. தாவா சொத்து உட்பட இதர சொத்துக்கள் சம்பந்தமாக 12.02.1951ல் பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் யார், யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சந்தியாகு, ஜெபமாலை, அருளானந்தம்

ஆகியோர்கள் கையொப்பம் போட்டுள்ளார்கள். பாகப்பிரிவினை ஆவணம் ஏற்பட்டதை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. 1951 பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படும் போது சந்தியாகு, ஜெபமாலை, அருளானந்தம் உயிரோடு இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அந்த பாகப்பத்திரத்தில் சந்தியாகு மூத்த மகன் ஜெபமாலை முதல் பார்ட்டியாகவும், இரண்டாவது மகன் மைக்கேல் சாமி இரண்டாவது பார்ட்டியாகவும் அவரின் மனைவி மரிய நட்சத்திரம் மூன்றாவது பார்ட்டியாகவும், ஜெபமாலையின் மக்களான பரதலோமி நாலாவது பார்ட்டியாகவும், அவருடைய தம்பி மோட்ச ஆனந்தம் ஐந்தாவது பார்ட்டியாகவும், அவருடைய தம்பி மைனர் மரிய செல்வம், இன்னாசிமுத்து 6, 7 பார்ட்டியாகவும், அவர்களின் தாயாரான கிரேஸ் அம்மாள் 6, 7 பார்ட்டிகளுக்காகவும், 8 வது பார்ட்டியாகவும், அருளானந்தத்திற்காக அவரது மைத்துனர் சேசு ஜெபஸ்தியான் 9 வது பார்ட்டியாகவும் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. இன்னாசிமுத்துவின் வாரிசுகள் தெரியுமா என்றால் வின்சென்ட், மோசஸ், சிங்கராயன், சந்தியா ராயப்பன், தெரசம்மாள், ஜெஸிந்தா, செலின் ஆகியோர் ஆவார்கள். அதாவது இன்னாசிமுத்துவின் வாரிசுகள் மரிய வின்சென்ட், மோசஸ், மரிய சிங்கராயன், சந்தியா ராயப்பன், தெரசம்மாள், ஜெஸிந்தா, செலின் மேரி ஆவார்கள் என்றால் சரிதான். மோட்சத்தின் வாரிசுகள் தெரியுமா என்றால் சேவியர் பெலிதிஸ், சேசு, ஜோன்ஸ், ஜார்ஜ் ஜனாதிபதி, ஜெயராஜ், பிரமிளா ஆவார்கள். அத்தனை வாரிசுகளிடமிருந்து மோசஸ் வழக்கு நடத்துவதற்கு உறுதி மொழி பத்திரம் எதுவும் வாங்கி வழக்கு நடத்தவில்லை என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு எழுத்து மூலமாக ஆவணம் எழுதி வாங்காததால் மோசஸை தவிர்த்து மற்றவர்கள் தாவா சொத்து பரிகாரம் கோர முடியாது என்றால் தெரியாது. தாவா சொத்தினை 1 முதல் 6 பிரதிவாதிகள் வேலி அடைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் முன்பக்கம் மட்டும் அடைத்துள்ளார்கள் எங்களுக்கும் அதில் பங்கு உள்ளது. தாவா சொத்தின் மொத்தம் 25 செண்ட்டில் முன்பகுதியில் எத்தனை செண்ட்ல் 1 முதல் 6 பிரதிவாதிகள் வேலி அடைத்துள்ளார்கள் என்றால் மதிப்பாக அடைத்து வைத்துள்ளார்கள் அது சுமார் 1 ஏக்கருக்கு மேல் இருக்கும். 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு உள்ள சொத்தைதான் வேலி அடைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் எங்களுக்குரிய சொத்தினை அனுபவம் செய்யவில்லை என்றால் எங்கள் பங்கையும் சேர்த்து தான் 1 முதல் 6 பிரதிவாதிகள்

அடைத்து வைத்துள்ளார்கள். நான் இந்த வழக்கில் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான் சொத்தில் உரிமை உள்ளது. நான் அந்த சொத்தை கேட்டு பரிகாரம் எதுவும் கோரியுள்ளேனா என்றால் இல்லை. 10..05.1999 ம் தேதி பரதலோமிக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 76 1/2 செண்டில் 10 செண்டை மட்டும் அவரது மகனான 1ம் பிரதிவாதி இராமேஸ்வரம் காமராஜர் நகர் டேவிட் மகன் ராஜன் என்பவருக்கு அடமானம் வைத்துள்ளார் என்றால் சரிதான் அவருக்கு சேரவேண்டிய சொத்தில் 10 செண்டை அடமானம் வைத்துள்ளார். அந்த பத்திரம் பதிவு செய்யப்பட்ட பத்திரம் என்றால் சரிதான். அந்த அடமானத்தை 13.03.2000 ம் வருடத்தில் 1ம் பிரதிவாதி திருப்பி விட்டார் என்றால் திருப்பியிருக்கலாம். 12.02.1951 பாகப்பிரிவினை பத்திரத்தில் இருந்து 09.05.1999 வரை 14.03.2000 லிருந்து தற்போது வரை தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை 1 ஏக்கர் 76 1/2 செண்டை 1 முதல் 6 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் பிரிக்காமல் மொத்தமாக அனுபவம் செய்து வருகிறோம். அந்த ஆவணத்தின் படி 1 ஏக்கர் 76 1/2 செண்டை 1 முதல் 6 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் 10.05.1999 லிருந்து 13.03.2000 ம் வருடம் வரை 10 செண்டை நீக்கி 1 ஏக்கர் 66 1/2 செண்டை 1 முதல் 6 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறாகள் என்றால் சரியல்ல. இந்த மாதிரி அனுபவம் செய்து வந்ததால் தான் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு தனித்தனியாக வா.சா.2 பட்டா வழங்கியுள்ளார்கள் என்றால் சரிதான் அவங்களுக்கு சேர வேண்டிய பங்கிலிருந்து 1 செண்ட், 2 செண்ட்டிற்கு பட்டா ஏற்பட்டுள்ளது. 1 முதல் 6 பிரதிவாதிகள் சொத்தினை தனித்தனியாக அனுபவம் செய்து வருவதால் இனாம் செட்டில்மெண்ட் ஆவணமும் பரதலோமி எழுதி வைத்துள்ளார் என்றால் இல்லை. அந்த இனாம் செட்டிமெண்ட், பட்டா படி 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு தனித்தனியாக வரிப்பதிவேடு ஏற்பட்டு அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த பட்டாவையும், இனாம் செட்டில்மெண்டையும் ரத்து செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 12.02.1951 பாகப்பிரிவினை பத்திரத்தில் சர்வே எண்.66 மற்றும் 77 க்குரிய மொத்த விஸ்தீரணம் 10 ஏக்கர் 74 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தில் 10 ஏக்கர் 74 செண்டை அலசு அந்தோணியின் மக்கள் 3 பாகங்களாக பிரித்துக்கொண்டார்களா

என்றால் 6 ஏக்கர் 46 செண்டை தான் மேற்படி மூவரும் பிரித்துக்கொண்டார்கள். 6 ஏக்கர் 46 செண்ட் என்பது தவறு 10 ஏக்கர் 74 செண்டை தான் மூன்று பேரும் 3 ஏக்கர் 58 செண்டாக பிரித்துக்கொண்டார்கள் என்றால் தெரியாது. நான் வாக்குமூலத்தில் 1956 ல் வாதியின் தந்தையார் கிரையம் வாங்கியதாக சொன்ன தேதி எனக்கு தெரியுமா என்றால் வருடம் தெரியும் தேதி ஞாபகம் இல்லை. விசாரணை வாக்குமூலத்தில் நான் 2 ஏக்கர் 15.33 செண்ட் இடத்தை இன்னாசிமுத்தும், மோட்ச ஆனந்தமும் சேசு ஜெபஸ்தியான் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் அந்த பத்திரத்தில் 2 ஏக்கர் 15.33 செண்ட் இரண்டு பேருக்கு பாத்தியப்பட்டதாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் அந்த மாதிரி வாக்கியம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தில் சர்வே எண்.66/2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சர்வே எண்ணில் அலசு அந்தோணிக்கு 10 ஏக்கர் 74 செண்ட் பாத்தியம் என்றும், அதன்பின்பு அவர் மக்களுக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினையில் 3 ஏக்கர் 58 செண்ட் பாத்தியம் ஏற்பட்டுள்ளது என்றும், அதை காட்டுவதற்கு 12.02.1951 ம் தேதியில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை தாக்கல் செய்தால் உண்மை நிலை தெரிந்துவிடும் என்று அதை மறைத்து தற்போது எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து சர்வே எண்.66/2 க்கு எந்த திசையில் சர்வே எண்.77 உள்ளது என்றால் கிழக்கு திசையில் உள்ளது. 7, 8 பிரதிவாதிகள் அனுபவித்து வரும் சொத்து எந்த திசையில் உள்ளது என்றால் தெற்கு பக்கம் உள்ளது. 7, 8 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வரும் இடத்திற்கு தெற்கே தான் சர்வே எண்.77 உள்ளது என்றால் தெரியவில்லை. சர்வே எண்.77 ன் விஸ்தீரணம் 4 ஏக்கர் என்றால் தெரியவில்லை. 4 ஏக்கரும் அலசு அந்தோணி மக்களான அந்தோணி மற்றும் இன்னாசிமுத்து கைவசம் உள்ளது என்றால் தெரியாது. ஜெபமாலையின் வாரிசுகள் 7 பேரில் இருவர் வாரிசு இல்லாமல் பாகப்பிரிவினை ஏற்படும் போது இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அதனால் ஜெபமாலையின் அனைத்து சொத்துககளும் வாரிசுகளான ஐந்து நபர்களையும் தான் கட்டுப்படுத்தும் என்றால சரிதான். நான் வாக்குமூலத்தில் ஜெபமாலையின் வாரிசுகள் ஏழு பேருக்கு சொத்து பிரிக்கப்பட்டதாக சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான். அதன்படி 30.76 செண்ட் பாத்தியம் என்பது தவறு என்றால் சரிதான். இன்னாசிமுத்து, மோட்ச

ஆனந்தமும் 2 ஏக்கர் 15.33 செண்டை கிரையம் வாங்கியதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாக்குமூலத்தில் ஐந்தாவது பாராவில் 97 செண்ட் இடத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் 25 செண்ட் என்று சொல்லிவிட்டு நான் வாக்குமூலத்தில் 97 செண்ட் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்து வருகிறார்கள் சொல்லியிருப்பது முண்ணுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிகள் முறையாக வேலி அடைத்து தனித்துவமான முறையில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் இன்னாசிமுத்துவின் உடன்பிறந்த சகோதரி சந்திய அடிமையின் மகன் வழிப் பேரன் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல்செய்யவில்லை என்றாலும், வாதி கேட்டுக்கொண்டதற்காக பொய் சாட்சிமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்